புதுச்சேரி நகராட்சி
புதுச்சேரி
***

எண்.978/பு.ந/உ.பொ-II/2023-24 தேதி: 15.03.2024

**அறிவிப்பு**

புதுச்சேரி இராஜீவ்காந்தி பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து நிலை பேருந்து உரிமையாளர்கள் மற்றும் கடை வியாபாரிகள், ஓட்டுநர்கள், ஆட்டோ, டெம்போ ஓட்டுநர்கள், தொழிலாளர்கள் பயணிகள் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் தற்போதுள்ள இராஜீவ்காந்தி புதிய பேருந்து நிலையம் பகுதி பகுதியாக இடிக்கப்பட்டு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் புதுச்சேரி நகர பொலிவுறு வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் மூலம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

2. புதிய பேருந்து நிலையம் கட்டும் பணியின் போது தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து பொதுமக்கள், பேருந்து உரிமையாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், டெம்போ ஓட்டுநர்கள், எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பணிகள் நடைபெறும்போது தற்காலிகமாக பேருந்து நிலையம் AFT மைதானத்தில் 22.03.2024 முதல் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து வழி தடங்களிலும் இயங்கும் நிலை பேருந்துகளும் பொது மக்களின் நலன் கருதி ஒரே இடமான AFT மைதானத்தில் இருந்து இயக்கப்படும். எனவே கட்டுமான பணிகள் முடிவடையும் வரை ஏற்படும் அசௌகரியங்களை அனைவரும் பொறுத்துக் கொண்டு புதிய பேருந்து நிலையப் பணிகள் விரைந்து முடிக்க ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Kandasamy
15/3/2024
ஆணையர்